11th August 1965]

அதற்கு ஈடாக ஒரு லட்சம் டன் ஆந்திராவிலிருந்து நமக்கு கிடைக்கிறது. ஆந்திராவில் இருந்து எவ்வளவு வந்திருக்கிறது, நாம் எவ்வளவு கொடுத்திருக்கிறோம் என்று மொத்தக் கணக்கைப் பார்க்கவேண்டும். நமக்கு எவ்வளவு வருகிறது என்பதுதான் கணக்கு. எங்கு வந்தது எங்கு போயிற்று என்று சொல்வதற்கில்லை. அப்படி போயிருந்தாலும் கணக்கு இருக்கிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : 20—9—1964 வரை உள்ள உணவு தான்ய இருப்பு பற்றியது மூலக் கேள்வி. அந்த வியாபாரிகள் தவறு செய்து விட்டார்கள் என்றால் அவர்களின் லைசென்ஸ் கான்சல் செய்யப்பட்டனவா? அந்த வியாபாரிகள் இன்னும் பட்டியலில் இருக்கிறார்களா? அதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்பதை முதல் அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்த லிஸ்ட் வேறு. நடைமுறையில் இருப்பது வேறு. அப்போதுள்ள நிலையை அப்போதே விளக்கியிருக்கிறோம். இப்போது அப்படி நடக்க ஒன்றும் இடமில்லை.

திரு. ர. ஜீவரத்தினம் : வட ஆற்காடு ஜில்லாவில் இப்போது பருவ மழை தவறிக் கொண்டிருக்கிறது. பல பகுதிகளில் உழவுத் தொழில் கூட ஆரம்பிக்கப்படவில்லை. அந்த ஜில்லாவிலிருந்து ஏராளமான உணவு தான்யங்கள் இப்போதும் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. கடந்த கால அனுபவத்தைக் கொண்டு அந்த ஜில்லாவில் கொள்முதல் செய்யும் உணவு தான்யங்களை அங்கேயே தேக்கி வைக்க சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அங்கத்தினர் அவர்கள் தமது மாவட்டத்தைப் பற்றி அவ்வளவு குறைவாக நினைக்கக் கூடாது. பருவ மழை எங்கும் தவறுவதுண்டு. ஆனால் மாவட்டத்திலிருந்து உபரியாக இருக்கிறதுதான் வெளிஜில்லாக்களுக்கு அனுப்பப்படும். மாவட்டத்திற்கு ஒன்றும் குறைவு வந்து விடாது.

Operation Theatres in Madurai Erskine Hospital

* 226 Q.—Sri V. S. S. Mani : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that the operation theatres in the Government Erskine Hospital at Madurai are not equipped with air-conditioning apparatus; and

(b) if so, whether there is any proposal to provide the Hospital with these equipments?

கனம் திருமதி. ஜோதி வெங்கடாசலம் : (அ) ஆம்.

(இ) மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனையில் உள்ள ஆபரேஷன் தியேட்டர்களில் குளிர்பதன வசதி ஏற்படுத்துவது குறித்து மருத்துவத் துறை நெறியாளர்களிடமிருந்து செயற் குறிப்புகள் இன்னும் வரவில்லை. அவற்றை 1966-67-க்குரிய 2-ம் பகுதித் திட்டத்தின் கீழ் சேர்த்து ஆலோசிக்கப்படும்.